★ காஞ்சிபுரம்
★ பெனாறிஸ்
★ மைசூர் சில்க்
★ பட்டு வேட்டி
★ சேட்டிங் சூட்டிங்
★ றெடிமேட் ஆடைகள்
அனைத்தையும்
தெரிவு செய்ய
ச. லிங்கநாதன்
வண்ணச் சோலை
13, 14. பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

G. S.
லிங்கநாதன் அன்கோவின்
மலிவு
விற்பனை வாரம்
மலரும் தீபாவளி திருநாளை
முன்னிட்டு
அனைத்து ஜவுளிகளும்
மலிவு விலையில்
ச. லிங்கநாதன்
வண்ணச் சோலை
(33519)

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 09 புதன்கிழமை (26 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 335

# காமினியின் மனைவி சிறிமா திஸாநாயக்காவே
# ஐ.தே.கட்சியின் புதிய ஜனாதிபதி வேட்பாளர்!

## சிறிமா திஸாநாயக்கா அரசியலுக்குப் புதியவர்

கொழும்பு, ஒக். 26

திருமதி சிறிமா திஸாநாயக்கா கட்சிக்குள் இருந்து கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

சட்டத்தரணியாக தொழில் புரிந்து வரும் சிறிமா திஸாநாயக்கா அரசியலுக்குப் புதியவர். கடந்த ஆண்டு தான் அரசியல் நடவடிக்கைகளில் நேரடியாகக் குதித்தவர்.

1993 இல் இருந்து மத்திய மாகாணசபை உறுப்பினராக இருந்து வரும் அவர், கடந்த பொதுத் தேர்தலிலும், தற்போதைய ஜனாதிபதித் தேர்தலிலும் தமது கணவருக்காக தீவிர பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## உயர்மட்ட அரசியலில் ஐந்தாவது விதவை சிறிமா

கொழும்பு, ஒக். 26

இலங்கையின் அரசியல் உயர்மட்டத்தில் கணவன்மார் இறந்ததும் அவர்களின் விதவை மனைவிமார் அந்த இடத்தைப் பிடித்துக்கொள்ளும் வழக்கப் பிரகாரம் —

கணவனைப் பறிகொடுத்த ஐந்தாவது பெண்மணி அரசியல்வாதியாக திருமதி சிறிமா திஸாநாயக்கா வந்துள்ளார்.

1959 இல் முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா சுட்டுக் கொலை செய்யப்பட்டதும், அவரின் துணைவியாரான சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சித் தலைவராகிப் பின்னர் பிரதமராகவும் தெரிவானார்.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவர் விஜயகுமாரதுங்கா சுட்டுக் கொலை செய்யப்பட்டதும், அவரது மனைவி சந்திரிகா குமாரதுங்கா கட்சியின் தலைவரானார். பின்னர் சுதந்திரக் கட்சியில் சேர்ந்து இபபோது பிரதமராகப் பதவி

[5 ஆம் பக்கம் பார்க்க]

## அனுதாப வாக்குகள் திரட்டவே இம்முடிவு

கொழும்பு, ஒக்ரோபர் 26

குண்டு வெடிப்பில் படுகொலையுண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான காமினி திஸாநாயக்காவின் இடத்துக்கு புதிய ஜனாதிபதி வேட்பாளராக அவரின் துணைவியார் திருமதி சிறிமா திஸாநாயக்காவை ஐ. தே. க. தெரிவு செய்தது.

காமினி கொலையுண்டதால் கிடைக்கக் கூடிய அனுதாப வாக்குகளை ஒன்று திரட்டி தேர்தலில் வெற்றி பெறும் நோக்கத்துடனேயே இத்தெரிவை ஐ. தே. க. மேற்கொண்டதாக அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

புதிய ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்வதற்காகக் கட்சியின் உயர் நிர்வாகிகளின் கூட்டம் நேற்று முழு நாளும் பல மட்டங்களிலும் நடைபெற்றதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

நேற்று மாலை கட்சியின் செயற்குழு கூடி திருமதி சிறிமா திஸாநாயக்காவை புதிய வேட்பாளராகத் தெரிவு செய்தது.

இந்த முடிவு ஏகமனதாக எடுக்கப்பட்டதாக ஐ.தே.க. உத்தியோ பூர்வமாக அறிவித்தது.

அதன் பின்னர் கட்சியின் நிறைவேற்றுக் குழு இந்த முடிவை அங்கீகரித்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

புதிய வேட்பாளர் தெரிவுக்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, திருமதி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ரணில் தெரிவு

கொழும்பு, ஒக். 26

கொல்லப்பட்ட காமினி திஸாநாயக்காவின் இடத்துக்கு புதிய எதிர்க்கட்சித் தலைவராக ரணில் விக்கிரமசிங்கா தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ரணில் இப்பதவிக்குத் தெரிவானது பற்றிய அறிவிப்பை சில செய்தி ஏஜென்ஸிகள் நேற்று மாலையில் வெளியிட்டன.

ஆனால்—

நேற்றுக் காலை நடைபெற்ற ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் எதிர்க்கட்சி தலைவர் பதவியை ஏற்க ரணில் முன்வந்தார் என்றும்—

எனினும் எதிர்வரும் வெள்ளியன்று டி. பி. விஜேதுங்கா தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் அதுபற்றிய

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் செல்வாக்கு குறைந்துவிடவில்லை

கொழும்பு, ஒக். 26

புதிய ஜனாதிபதி வேட்பாளராக சிறிமா திஸாநாயக்கா தெரிவு செய்யப்பட்டாலும்—

ஐ.தே.கட்சியின் தலைமைத்துவமும் கட்சிக்குள் செல்வாக்கும் ரணிலின் கைகளை விட்டு நழுவிப் போய்விடவில்லை என பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் குறிப்பிட்டார்.

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## உட்கட்சிப் பூசலால் ஐ.தே.கவில் பிளவு?

கொழும்பு, ஒக். 26

காமினி திஸாநாயக்கா கொல்லப்பட்டதை அடுத்து புதிய ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யும் ஐ.தே.கவின் முயற்சியின்போது கட்சிக்குள் பெரும் பிளவு ஏற்பட்டிருப்பது துலாம்பரமாகத் தெரிந்தாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

புதிய வேட்பாளரைத் தெரிவு செய்வது— தாமதமாகி— நேற்று முழுவதும் இழுபட்டதே கட்சிக்குள் பெரும் குழுச்சண்டை இருப்பதை காட்டுவதாக உள்ளது என பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் குறிப்பிட்டார்.

முதலில் இந்த விடயம் சுலபமாகத் தீர்க்கப்படும்; புதிய வேட்பாளராக ரணில் தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் கட்சிக்குள் உட்கட்சிப் பூசல் வெடித்தது; முடிவு மாறி வெளியாகியது.

யார் யாருடன் சேருகிறார்கள்; எந்த அணி எந்த அணியுடன் இணைந்து செயற்படுகின்றது என்று கூறமுடியாத நிலையில் உட்கட்சிப் பூசல் இருந்தது— இவ்வாறு செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டார். [உ எ]

## சுவீடன் கடலில் தத்தளித்த 33 ஈழத்தமிழர்கள் மீட்பு!

சுவீடனுக்கு அண்மையில் கடற்பரப்பில் உயிர்காப்புப் படகுகளில் தத்தளித்துக் கொண்டிருந்த 33 ஈழத்தமிழ் அகதிகள் மீட்கப்பட்டுள்ளதாக சுவீடன் தலைநகர் கோபன்கேகனில் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்கள் எவ்வாறு உயிர் காப்புப் படகுகளில் இந்தக் கடற்பரப்பிற்கு வந்தார்கள் என்பது குறித்து விசாரணை நடப்பதாகவும் —

மேற்படி அகதிகள் பயன்படுத்திய உயிர்காப்புப் படகுகளுக்கு அண்மையில் நின்ற போலந்து நாட்டு மீன்பிடிக் கப்பலின் கப்டனும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என்றும் கோபன்கேகன் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த சிலகாலமாக இக் கடற்பகுதி ஊடாக வந்த 91 ஈழத்தமிழ் அகதிகள் டென்மார்க்கில் தஞ்சம் கோரியுள்ளதாக செய்திகள் தெரிவித்தன. (உ-4)

## பிரதமர்-ராணுவ தளபதி சந்திப்பால் கருத்து வேறுபாடுகள் நீங்கின!

கொழும்பு, ஒக். 26

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா இராணுவத்தைக் கண்டித்து பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி தொடர்பாக அரசுக்கும் இராணுவத் தலைமைப் பீடத்துக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் இணக்கமான முறையில் தீர்க்கப்பட்டுவிட்டன.

பாதுகாப்பு அமைச்சு இதனை உறுதி செய்ததாக ''சண்டே ஒப்சேவர்'' வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

பிரதமரின் பி.பி.ஸி. பேட்டியை அடுத்து இராணுவத்தின் பல சிரேஷ்ட அதிகாரிகள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் ரத்வத்தையுடன் கருத்துப்பரிமாற்றம் நடத்தினர் என்றும் —

அதனை அடுத்து இராணுவத் தளபதி ஜெரிடீ சில்வா, பிரதமரை கடந்த வியாழக்கிழமை சந்தித்துப் பேசினார் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

அச் சந்திப்பில் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ரத்வத்தையும் கலந்து கொண்டார்.

பாதுகாப்பு தொடர்பான பல விஷயங்கள் குறித்து அச் சந்திப்பின் போது ஆராயப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. தலைமையகத்தில்
## ரூபவாஹினி குழுவினர் நையப்புடைக்கப்பட்டனர்

கொழும்பு, ஒக். 26

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் புதிய வேட்பாளரைத் தெரிவு செய்வதற்காக நேற்று மாலை ஐ. தே. க. நிர்வாகக் குழு கட்சித் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் கூடிய போது —

அது பற்றிய செய்திகளைச் சேகரிக்கச் சென்ற ரூபவாஹினி படப்பிடிப்பாளர்கள் மற்றும் செய்தியாளர் குழுவினர் ஸ்ரீகோத்தாவுக்கு முன்னால் கூடியிருந்த கூட்டத்தினால் நையப்புடைக்கப்பட்டனர்.

ரூபவாஹினி குழுவினர் வாகனத்தில் போய் இறங்கியதும் அங்கு நின்ற கூட்டத்தினர் வாகனத்தை நோக்கி ஓடிவந்து மிகமோசமான வார்த்தைகளால் திட்டியபின் தாக்குதலை நடத்தினராம் ரூபவாஹினி படப் பிடிப்பாளர்களின் படப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா கடற்படையினர் தமிழக மீனவரை தாக்கினர்!

இராமேஸ்வரம், ஒக். 26

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 8 மீனவர்கள் இந்தியக் கடற்பகுதியில் தாம் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டதாக தனுஷ்கோடி காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கியின் அடிக்கட்டையால் தங்களைத் தாக்கியதாகவும் அவர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா கடற்படையினர் கத்தியால் தங்களை குத்தியதாகவும் மற்றொரு படகில் சென்ற மீனவர்கள் முறையிட்டுள்ளனர் (ஓ-4)

## சமாதான மாநாடு, பாசறை கொழும்பில் நடந்தன

கொழும்பு, ஒக். 26

காமினி திஸாநாயக்கா படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு மத்தியிலும் கொழும்பில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் திட்டமிட்டபடி சமாதான மாநாடும் பாசறையும் நேற்று நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

சமாதான பாதயாத்திரையும் திட்டமிட்டபடி நடத்தப்பட்டது.

குண்டு வெடிப்புக்காக சமாதான முயற்சிகளைக் கைவிட முடியாது என்று இப்பாதயாத்திரையின் அமைப்பாளர் வண. பிதா பேட் தெரிவித்தார். (ஓ-எ-6)

## சூழல் பாதுகாப்பு கொடி வாரம்

சூழல் பாதுகாப்பை ஒட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்தும் சூழல் விழிப்புணர்வு 'கொடி வாரம் இன்று புதன் கிழமை முதல் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை வரை நடைபெறும்.

கொடிவார நிகழ்ச்சிகள் இன்று காலை 8.30 மணிக்கு சகல பாடசாலை, திணைக்களங்கள் மற்றும் அனைத்து அலுவலகங்களிலும் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும்.

இந்த நாட்களில் [illegible] கள் விநியோகிக்கப்பட்டு சூழல் [illegible] பாதுகாப்பு [illegible] பணம் சேகரிக்கப்படும்.

## பொலீஸ் பாதுகாப்புடன்
## வாக்காளர் அட்டைகள் நேற்று முதல் விநியோகம்

கொழும்பு, ஒக். 26

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் வேலைகள் நேற்று ஆரம்பமாகின.

வாக்காளர் அட்டைகளை விநியோகிப்போருக்கு பொலீஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## இலங்கையில் வன்முறைகளுக்கு
## சீக்கிரமே தீர்வு காணும்படி அமெரிக்கா கோரிக்கை

வாஷிங்டன், ஒக். 26

இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் வன்முறைக்கு சீக்கிரமே தீர்வு காணும்படி அமெரிக்கா இலங்கை மக்களைக் கேட்டுள்ளது.

அமெரிக்க அரசின் பேச்சாளர் கிறிஸ்ரீன் ஷெல்லி இதனை நேற்று வெளியிட்டார்.

காமினி திஸாநாயக்காவும் ஏனையோரும் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையும் அமெரிக்கா பலமாகக் கண்டித்துள்ளது.

சிக்கலான இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை மக்கள் விரும்பும் வேளையில் இப்படி ஓர் அர்த்தமற்ற வன்முறை நிகழ்ந்திருப்பது வருந்தத்தக்கது என்றும் அமெரிக்க அரசின் பேச்சாளர் தெரிவித்தார். (ஒ-எ)

## காமினி கொலையுண்ட கூட்டத்தில் காணப்பட்ட அந்தப் பெண் யார்?
## இரு தினங்களுக்குள் துப்பு துலங்குமாம்

கொழும்பு, ஒக். 26

காமினி கொலையுண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட இரு புகைப்படங்களில் காணப் [illegible] பெண்ணை அடையாளம் காட்ட உதவுங்கள்.

— இவ்வாறு பொலீஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பெண்ணை அடையாளம் காண்பதன் மூலம் [illegible]டக் கட்டி வந்த தற்கொலைத் தாக்குதல் நபரை அடையாளம் காண முடியும் என சி. ஐ. டி. பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ஒ. கே. ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்திவரும் சி. ஐ. டி. பிரிவினர் இது குறித்து இரு தினங்களுக்குள் துப்புத்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கொலைக்கு பொறுப்பு யார் என்பதில் திணறல்!

கொழும்பு, ஒக். 26

காமினியின் படுகொலைக்கு பொறுப்பானவர்களை அடையாளங்காண முடியவில்லை என்று பொலீஸ் மா அதிபர் பிராங் டீ சில்வா தெரிவித்தார்.

பல்வேறு அபிப்பிராயங்கள் கூறப்படுகின்றன.

புலிகள் பொறுப்பு என சிலர் கூறுகின்றனர்.

ஏனைய தமிழ்க்குழுக்கள் தான் இதற்குக் காரணம் என்று வேறு சிலர் கூறுகின்றனர்.

உட்கட்சி நெருக்கடி தான் இச் சம்பவத்துக்குக் காரணம் என்று கூறுவோரும் உள்ளனர்.

முடிவுக்கு வரமுன் இந்த

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் செயலக [கச்சேரி] சிற்றுண்டிச்சாலை

## குத்தகை அறிவித்தல்

யாழ். செயலகச் சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்குப் பெற்று நடத்துவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்வி முடிவு திகதி:- 15-11-1994**

கேள்விப் பத்திரங்கள், நிபந்தனைகள், ஏனைய விவரங்கள், அலுவலக நேரங்களில் யாழ். மாவட்ட செயலக நலன்புரிக்கழக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஞா. றொ. இராஜசிங்கம்
கௌரவ செயலாளர்,
யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்,
25. 11. 1994. [சி/9444]

## கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை அருட்திரு ஞானராசா அடிகளாரின் தந்தை மிருசுவில்

### ஞானப்பிரகாசம் ஸ்ரனிஸ்லோஸ்

அவர்களின் மரணச்செய்தி அறிந்து கவலையுற்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்து, எமதுகண்ணீர் அஞ்சலியைத் செலுத்துகின்றோம்.

கல்யாணி தங்க மாளிகை,
189 A, சந்தோசம் [கஸ்தூரியார்] வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/9447]

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், ஒக். 26

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறும்.

அன்று பிற்பகல்ஒருமணிக்கு நடைபெறும் விழாவில் நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வ. தானையா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி மகேஸ்வரி தானையா பரிசில்களை வழங்குவார்.

(எ)

★ ★ ★

தென்மராட்சி, ஒக். 26

பளை வண்ணான்கேணி கேசவன் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் நாளை வியாழன் பிற்பகல் 2-00 மணிக்கு வண்ணான் கேணி மாவீரர் விளையாட்டு மைதானத்தில் திருமதி சச்சிதானந்தம் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக பளை பிரதேச செயலர் இ. ஐயாத்துரை கலந்து கொள்வார். (இ-117)

## இன்ரறக்ட் கழக மாதாந்தக் கூட்டம்

இடம்: யாழ். இந்துக் கல்லூரி
காலம்: 26 — 10 — 1994 புதன்கிழமை
மாலை 4.00 மணி

அனைத்து இன்ரறக்ட் கழக தலைவர், செயலாளர்களை குறித்த நேரத்தில் சமுகம் தருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

**Rtn.** ஈ. சரவணபவன்,
தலைவர், றோட்டரிக் கழகம்.

**Rtn. Dr.** கு. ஸ்ரீஇரத்தினகுமார்,
இளைஞர் சேவை இயக்குநர்.

[சி-9441]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 06 — 1933

மறைவு: 28 — 09 — 1994

திருமதி


### சரஸ்வதிதேவி சிவபாதசுந்தரம்

28-09-1994 ஆம் திகதி அமரத்துவம் அடைந்த திருமதி சரஸ்வதிதேவி சிவபாதசுந்தரம் அவர்களுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், சேவை புரிந்த டாக்டருக்கும், நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் 27-10-94 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

கணவன்: சு. சிவபாதசுந்தரம்
மகன்: சி. சுரேந்திரன்
சகோதரன்: க. கணேசலிங்கம்

இடைக்குறிச்சி,
வரணி. (33521)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் துரையப்பா இராஜரெட்ணம்

தோற்றம்: **12—07—1919**

மறைவு: **17—10 1984**

தந்தையாய், குருவாய், தலைவனாய் எம்மையெல்லாம் வழிநடத்தி, இன்று சிவத்தோடு கலந்துவிட்ட உங்களின் இனிமையான நினைவுகள் என்றும் எம்மை விட்டகலாது ஐயா. பண்பும், பாசமும் நிறைந்த அருமைமிகு ஐயாவே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து பத்து ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் எல்லோரினதும் மனதை விட்டு நீங்காதையா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வளாக வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (சி/9537)

## முக்கிய அறிவித்தல்

**A/L 94, 95, 96**

பொருளியல் வகுப்புகள் யாவும் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.

நன்றி.

ஆசிரியர் **K.** உதயன்

(சி/9535)

## A/L 96

**PURE./APP.**
Mr. கமலசிங்கம் B.Sc.(Hons)

**CHEMISTRY**
Mr. மகேஸ்வரன் B.Sc.(Hons)

**PHYSICS**
Mr. மோகன் B.Sc.

**SHAMROCK**
யாழ். சுண்டுக்குளி

(33524)

வாடிக்கையாளர்களுக்கு!

## பேரரசி வண்ணச்சோலை

புடைவை மாளிகையினரின் உளங்கனிந்த

### தீபாவளி வாழ்த்துக்கள்!

அன்பான வாடிக்கையாளர்களே!

இதுவரை இலக்கம் 50, பெரிய கடை வீதி (சோதியா வீதி)இல் இயங்கி வந்த

**மகாராணி புடைவை மாளிகை**

என்ற எமது நிறுவனம் அதே இடத்தில்

## பேரரசி வண்ணச் சோலை

ஆக புதுக் கோலத்துடன் பொலிகிறது!

புதிய சோலையில் உங்கள் நெஞ்சம் கவரும் வண்ணங்களில்

சேலை, ரவிக்கைத் துண்டுகள், ஷேட்டிங், சூட்டிங் வகைகள் மற்றும் பிள்ளைகளுக்கான ஆடைகள் தீபாவளிக்கென தருவிக்கப்பட்டவை

★ நியாய விலை!
★ தரம் உத்தரவாதம்!

(சி-9445)

# நெடிதுயரும் மரம் நட்டு கொடி வாரம் கொண்டாடுவோம்

# கொடி வாரம்

## ஒக். 26 -- நவ. 01

சூழல் பாதுகாப்புப் பகுதி,

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழீழம்.

(சி/9442)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான முயற்சி மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும்

## ஐ.நா. பொதுச்செயலாளர் வலியுறுத்து

வாஷிங்டன், ஒக். 26
இலங்கையில் அமைதியைக் கொண்டு வரும் சமாதான நடைமுறைகள் மீண்டும் ஆரம்பமாக வேண்டும் என்று ஐ.நா. பொதுச்செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினிதிஸநாயக்காவும் மற்றும் அரசியல் தலைவர்கள் சிலரும் கடந்த ஞாயிறு நள்ளிரவு படுகொலைசெய்யப்பட்ட சம்பவம் குறித்து வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே ஐ.நா. பொதுச் செயலாளரின் இவ்விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டுத்தாக்குதல் சம்பவத்தைக் கண்டனம் செய்த அவர், உயிரிழந்தவர்களுக்கு அனுதாபமும் தெரிவித்தார். (இ-எ)

## சிமெந்து எடுத்து வருவதற்கு படையினர் கெடுபிடி!

### நாளொன்றுக்கு 150 பைக்கெட்

வவுனியா, ஒக். 26
வடபகுதிக்கு சிமெந்து எடுத்து வருவதற்குதொடர்ந்தும் படையினர் கெடுபிடிகளை செய்து வருகின்றனர் என்று லொறி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பிலிருந்து அதிக எண்ணிக்கையான சிமெந்து பைக்கற்றுகள் லொறிகளில் எடுத்து வரப்படுகின்ற போதும், தினமொன்றுக்கு 150 பைக்கெட்டுகள் என்ற வீதத்திலேயே, வவுனியா ஈரற்பெரியகுளம் முகாமில் அனுமதி வழங்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் வவுனியா இணைப்பதிகாரியின் அனுமதிப்பத்திரம் பெற்ற பின்பும் எடுத்துவரப்படும் சிமெந்தில்—லொறி ஒன்றுக்கு பத்து அல்லது பதினைந்து பைக்கெட்டுகள் என்ற வீதத்தில்—நாளொன்றுக்கு மொத்தம் 150 வரையான சிமெந்து பைச்கெட்டுகளேவடபகுதிக்கு தற்போது அனுமதிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (ஓ-4)

## பாடசாலை தளபாடங்களை இங்கு தயாரிக்க முடிவு?

யாழ்ப்பாணம், ஒக். 26
யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்குத் தேவையான தளபாடங்களை யாழ்ப்பாணத்திலேயே செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொழும்பிலிருந்து தளபாடங்களைசெய்து கொண்டு வருவதற்கு பெரும்தொகை பணம் செலவாவதாகவும், தளபாடங்கள் செய்வதற்குத் தேவையான இரும்புக் கம்பி, பலகைகளை அங்கிருந்து கப்பல் மூலம் தருவித்து யாழ்ப்பாணத்திலேயே தளபாடங்களை செய்வதானால் பெருந்தொகை பணம் மிகுதியாகும்.ாவடக்கு — கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. எஸ். சடாச்சர சண்முகதாஸ் தெரிவித்தார்,

கப்பலில் தளபாடங்களாக ஏற்றி வரும்போது அவை கூடுதல் இடத்தை பிடிக்கின்றன. இதற்குப் பதிலாக தளபாடங்களை செய்வதற்குரிய இரும்புக் கம்பிகள், பலகைகளை ஏற்றி வந்தால் இட வசதி குறைந்து கப்பல் கட்டணம் குறைவாக இருக்கும். இதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கினாலே இவ்விடயம் சாத்தியப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளின் குரல் வானொலியில்

**26 — 10 — 1994**

**புதன் இரவு**

★ 8-01 — குயிலோசை — நிகழ்ச்சியில் இயல்வாணன் எழுதிய ''முத்தெடுத்து விற்றிடுவோம்'' கிராமிய நிகழ்வு
★ 8-20 — ஏர்முனை — ''கொடிவாரம் கொண்டாடுவோம்'' உரையாடல்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நாடகம் — மூதூர் அருள்ராஜ் எழுதிய ''ஊன்று கோல்''

**27 — 10 — 1994**

**வியாழன் காலை**

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 —விடுதலை கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## ஊரடங்கு மத்தியில் கோமாரி

வடமராட்சி, ஒக். 26
ஊரடங்குச்சட்டம்பிறப்பிக்கப்பட்ட போதிலும் கோமாரி கப்பல் பருத்தித்துறை துறைமுகம் வந்ணமா இறக்கியது. (இ-173)

## அம்பாறையில் தாக்குதல்; அதிரடிப்படை சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், ஒக். 26
அம்பாறை மாவட்டத்தில் திங்கள் காலை 8.30 மணியளவில் பொலீஸ் அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். ஆயுதங்கள் சிலவற்றைப் புலிகள் கைப்பற்றினர்.

பண்ணலகம முகாமிலிருந்தும், மிராகல முகாமில் இருந்தும் புறப்பட்டு தடைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸ் அதிரடிப்படையினர் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலை அடுத்து சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதும் ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடினர்.

இதேசமயம் தாக்குதலுக்கு இலக்கான படையினருக்கு உதவ மிராகல முகாமில் இருந்து முன்னேறிய படையினர் மீதும் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலின்போது படையினரிடமிருந்து புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| ★ கோல் கொமாண்டோ | — 01 |
| ★ மகஸீன்கள் | — 04 |
| ★ 5.56 ரக ரவைகள் | — 80 |
| ★ ஜே.ஆர். கிரனேட் | — 01 |
| ★ ஜக்கெற் ஹோல்சர் | — 01 |
| ★ தண்ணீர் கான் | — 01 |
| ★ தொப்பி | — 01 |

## அம்புலன்ஸ் மீண்டும் சேவை

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக பழுதடைந்த நிலையில் இருந்த சங்கானை வைத்தியசாலை அன்புலன்ஸ் திருத்தியமைக்கப்பட்டு மீண்டும் சேவையில் ஈடுபட்டு வருகிறது. (ஓ-13)

## கெற்பலி மாவீரர் சோலை 10 ஏக்கரில் விஸ்தீரணம்

யாழ்ப்பாணம், ஒக். 26
நாட்டின் விடிவிற்காய் தங்கள் இன்னுயிரை வித்தாகிய மாவீரர் நினைவாக தென்மராட்சிப் பகுதியிலுள்ள கெற்பலி என்னும் இடத்தில் அமைக்கப்பட்ட மாவீரர் சோலை இவ் ஆண்டு மேலும் 10 ஏக்கரால் விஸ்தீரணமாக்கப்படவுள்ளது.

இதில் 2 ஏக்கர் நிலப் பரப்பில் சவுக்கம் கன்றுகளும், 2 ஏக்கரில் இலுப்பையும், 2 ஏக்கரில் மகோக்கனியும், 2 ஏக்கரில் வேம்பங்கன்றுகளும், 2 ஏக்கரில் புளியங் கன்றுகளும் நடுகை செய்யப்படவுள்ளன.

தற்போது காடு துப்புரவு செய்யப்பட்டு சுற்று வேலிகள் அடைக்கப்பட்டு மரநடுகைக்கான குழிவெட்டுதல்போன்ற பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சென்ற வருடமும்10 ஏக்கர் விஸ்தீரணமான நிலப்பரப்பில் பயன்தரு பல இன மரக் கன்றுகள் நடுகை செய்யப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ)

## போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 26
கடந்த 20 ஆம் திகதி மட்டக்களப்பில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வீரவேங்கை கிறிஸ்ரி அல்லது சின்னத்தம்பி (நாவலிங்கம் நாவேந்தன் — மட்டக்களப்பு), வீரவேங்கை தியாகராஜா (விநாயகமூர்த்தி சிவநாதன் — மட்டக்களப்பு) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

யாழ். மாவட்டத்தில் திங்களன்றுபடையினருடன் இடம்பெற்ற மோதல் ஒன்றில் இரண்டாம் லெப்டினன்ட் கரிகரன் (பொன்னுத்துரை சண்டேஸ்வரன் — மட்டக்களப்பு) என்றபோராளி வீரச்சாவடைந்தார். (ஐ-4)

## பெற்றோர் தின விழா

யாழ்ப்பாணம்,ஒக். 26
யாழ். வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் பெற்றோர் தின விழா இன்று புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் மு. செல்லையா தலைமையில் நடைபெறும்.

யாழ். வலயம்- 1 கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி விழாவில் பிரதம விருந்தினாரகக்கலந்து கொள்வார். (இ-17)

## கலந்துரையாடல்

வலி. தென்மேற்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள சகல ஐக்கியநாணய சங்கங்கள், சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

சங்க உத்தியோகத்தர்களான தலைவர் ,செயலாளர், பொருளாளர் ஆகியோர் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-17)

## அமைச்சரை சந்திக்க பயணம்

காங்கேசன்துறை சிமெந்து நிறுவனத்தின் தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தொழிற் சங்க பிரதிநிதிகள் குழு ஒன்று கொழும்பு சென்றுள்ளது. (இ-17)

## மீனவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 25
மண்டைதீவு கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் மீது படையினர் திங்கள் அதிகாலை நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஒருவர் காயமடைந்தார்,

நாவாந்துறையைச் சேர்ந்த நிக்கலஸ் வின்சன் (வயது 32) என்பவரே காயமடைந்தார். (ஐ-15)

## பாம்பு தீண்டி மரணம்

விறகு வெட்டச் சென்றவர் பாம்பு கடித்து மரணமான சம்பவம் பளை வேம்போடு கேணி சடையர்காடு என்னும் இடத்தில் இடம்பெற்றது.

அதே இடத்தைச்சேர்ந்த புண்ணியர் நாச்சிப்பிள்ளை (வயது 60) என்பவரே மரணமானவராவார். (இ-117)

★ தீபாவளி ★
திருநாளை ஒட்டி
நடைபெற்றுக் கொண்டிருக்கும்
மாபெரும்
மலிவு விற்பனையில்
கலந்து பயன் பெறுங்கள்!
நாளைக்கு நாளைக்கு என்றிருக்காமல்
இன்றே நாடுங்கள்:
விக்னேஸ் ஆடையகம்
45, சந்தோஷம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-9534]

# வடபகுதிப் போக்குவரத்து பாதையை உடனடியாகத் திறக்க வேண்டும்!

## முன்னாள் செனெட்டர் டிக்ஷன் சில்வா பேட்டி

கொழும்பு, ஒக். 26
''வடபகுதிக்குத் தேவையான பொருள்களை ஏற்றிச் செல்ல போக்குவரத்துப் பாதையை உடன் திறக்க வேண்டும்''

முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செனெட்டர் டிக்ஷன் சில்வா ''சிலுமின'' பத்திரிகைக்கு (18-09-1994) அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு கூறினார்.

தென்பகுதிப் பொருள்கள் வடபகுதிக்கு அனுப்பப்படும்போது வடபகுதி விவசாய உற்பத்திகள், கடலுணவுகள் தென்பகுதிக்கு வர வழியேற்படுமானால் வடபகுதி மக்களுக்கும் தென்பகுதி மக்களுக்கும் பிரிக்க முடியாத உறவு இயல்பாகவே ஏற்படும் என்று அவர் மேலும் கூறினார்.

திரு. டிக்ஷன் சில்வாவிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும் வருமாறு:

கேள்வி: வடபகுதிப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக கடந்த பொதுத் தேர்தலின் போது பல மேடைகளில் நீங்கள் குரலெழுப்பினீர்கள். அவ்வாறான எண்ணம் உங்களுக்கு ஏற்படக் காரணம் என்ன?

பதில்: யுத்தம் முடிவிற்கு வராமல் தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு நாட்டில் அபிவிருத்திகளில் பின்னடைவுகள் ஏற்படும் என்பது சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல. எமது நாடு ஏழை நாடு. இந்நாட்டிற்கு தொடர்ந்த யுத்தத்திற்காகப் பெருந்தொகைப் பணத்தை வருடாந்தம் செலவிடக் கூடிய சக்தி இல்லை. மேலும் இந்த அர்த்தமற்ற யுத்தத்தை நடத்துவதால் முக்கியமான அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவிட வேண்டிய நிதிவிரயமாகிறது. யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்பதை தற்போது இரு தரப்பினரும் ஏற்றுள்ளனர்.

இந்தப் பிரச்சிக்கு தீர்வொன்றினைக் காணமுடியும். இதற்குத் தேவையான நேர்மையான தலைமைத்துவம் தற்போது நாட்டிற்குக் கிடைத்துள்ளது. பிரதமர் சந்திரிகாவின் தலைமையில் இப்பிரச்சினைக்குத் தீர்வொன்றினைக் காண முடியுமென தென்பகுதி மக்கள் மாத்திரமல்ல, வடபகுதி மக்களும் நம்பிக்கை வைத்துள்ளனர்.

கேள்வி: வடபகுதி யுத்தம் கடந்த ஒன்றரை தசாப்தமாக நடைபெற்று வருகிறது. இதற்குத் திடீரெனத் தீர்வினைக் காணமுடியும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: தேசியச் செல்வம் விரயமாகக் காரணமான இந்த பிரச்சினைக்குத் தீர்வினைக்காண முன்னாள் தலைவர்கள் நேர்மையுடன் செயற்பட்டனர் என்று என்னால் நம்ப முடியாது. தேசியப் பிரச்சினையாகக் கருதி இந்த யுத்தத்தை நிறுத்த வேண்டிய தேவை அவர்கள் எவருக்கும் இருந்திருக்கவில்லை.

எமது பௌத்த பிக்குகள் கொல்லப்பட்டதும் ஏதுமறியா பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; குண்டுகளை வீசி கட்டடங்களை அழித்தனர். சிறிய பிரச்சினைகளை இழுத்து நீட்டியதுதான் மிச்சம். மீண்டும் சிறிதுகாலம் துயில் கொள்ளுகிறார்கள். இதுதான் நடைபெற்று வருகிறது. யுத்தத்தால் பாதிக்கப்படுவது அந்த அரசியல் தலைவர்கள் அல்லர். வடபகுதி, தென்பகுதி அப்பாவி மக்களேயாவர்.

யுத்தத்தில் மரணமடையும் சிப்பாய்களில் பெரும்பாலானோர் எமது கிராமப்புற ஏழைகளே. யுத்தத்தால் சொத்துக்கள் அழிவது மாத்திரமல்ல பெறுமதி மிக்க உயிர்கள் அகாலமரணமடைகின்றன. இறப்பவர்கள் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் யாராயிருப்பினும் அவர்கள் உடலினால் அல்லது மூளையினால் நாட்டிற்கு உழைக்கும் இந்நாட்டவர்கள் என நாங்கள் சிந்திக்க வேண்டும்.

பிரதம மந்திரி இவ்விடயத்தை சரியான விதத்தில் இனங்கண்டு திடசங்கற்பத்துடன் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

கேள்வி: புதிய அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து மூத்த அரசியல்வாதி என்றவகையில் உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: யுத்தம் நிறுத்தப்படின் அதனால் பயனடைவது வடபகுதி, தென்பகுதி சாதாரண மக்கள் தான். சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். யுத்தமில்லை எனில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களிலிருந்து கொழும்புச் சந்தைக்கு வரும் மீன் எவ்வளவு! இதன் மூலம் வடக்குக்கிழக்கு மீனவர்களுக்கு நல்ல சந்தை வாய்ப்புக் கிடைக்கும். அதே வேளையில் தென்பகுதியில் அதிகரித்துள்ள மீனின் விலை குறையும். எனவே வடபகுதி மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதை தடை செய்வதும் பாதுகாப்புக் காரணங்களுக்காகப் போடப்பட்டுள்ளதுமான கடல்வலயச் சட்டம் தளர்த்தப்பட வேண்டும்.

மறுபுறத்தில் வடபகுதி உற்பத்திகளான வெங்காயம், கிழங்கு, மிளகாய் போன்றவற்றிற்கு நல்ல எதிர்காலம் உருவாகும். தற்போது வடபகுதியில் கைவிடப்பட்டிருக்கும் அல்லது குறைந்த அளவில் மேற்கொள்ளப்படும் இப்பயிரினங்களின் செய்கை யுத்தம் நிறுத்தப்படின் மீண்டும் பெருமளவில் மேற்கொள்ளப்பட வாய்ப்புண்டு. இதனால் இவ்விவசாயிகளுக்கு ஒளிமயமான எதிர்காலம் உருவாகும்.

முன்னர் கொழும்புச் சந்தையில் வெங்காயத்திற்குத் தட்டுப்பாடு ஏற்படும் வேளைகளிலும் நுவரெலியா, வெலிமடை உருளைக்கிழங்கிற்குத் தட்டுப்பாடு ஏற்படும் வேளைகளிலும் அவை வடபகுதியிலிருந்தே கொழும்பிற்குக் கொண்டு வரப்பட்டன.

தென்பகுதியில் மீன்பிடிப் பருவங்கள் இல்லாத வேளைகளில் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து வந்த மீன் வகைகளே மீன் தேவையை ஈடுசெய்தன. இவை நிறுத்தப்பட்டது மிகவும் துன்பகரமானதாகும்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ளது ஒரு சிறு தொகையினரே. ஆனால் இந்த யுத்தத்தால் பாதிக்கப்படுவதோ பெருந்தொகையான ஏதுமறியா அப்பாவி மக்களேயாகும். இம்மக்களுக்கு யுத்தம் வேண்டிய தொன்றல்ல.

கேள்வி: இரு பகுதி மக்களையும் இணைக்கும் அதே வேளையில் அரசியல் தீர்வு ஒன்று அவசியமல்லவா?

பதில்: ஆம் அரசியல் தீர்வு அவசியமாகும். விடுதலைப் புலிகளுடனேயே சமாதானப் பேச்சை மேற்கொள்ள வேண்டும். பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படும் விடயம் தொடர்பாக எமது நிலைப்பாடு, எங்களால் வழங்கக் கூடியவை ஆகியன பற்றி எமக்குத் தெளிவு இருக்க வேண்டும். மக்களுக்குத் தேவையில்லாத யுத்தத்தை அதிக காலம் மேற்கொள்ள முடியாது என்பதே எனது எண்ணம்.

பிரதமர் சந்திரிகா சொன்னதைச் செய்யும், செய்வதைச் சொல்லும் தலைவியாவார். இவ்வாறன தெளிவான தலைமைத்துவத்தின் கீழ் [illegible] கிடைத்த வாய்ப்பை நாட்டின் [illegible] வேண்டும். (ஒ-க-10)

## சாவகச்சேரி நகரசபை

## 1995 ஆம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

01-01-1995 தொடக்கம் 31-12-1995 வரையிலான காலப் பகுதியின் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபாரம் / சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 16-11-1994 ஆம் திகதி முற்பகல் 10-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| விவரம் | கடை இல. | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| **வியாபாரம்** | | | | |
| 1. சாவகச்சேரி நகரசபை பொதுச் சந்தை (சபையால் மாதாந்தம் அறவிடப்படும் கடை, ஊடு வாடகைகள் நீங்கலாக) | | 2,66,800-00 | 1,500/- | 500/- |
| 2. சாவகச்சேரி நகரசபை மீன் சந்தை (சபையால் மாதாந்தம் அறவிடப்படும் கடை வாடகைகள் நீங்கலாக) | | 67,100-00 | 1,500/- | 500/- |
| 3. ஆட்டிறைச்சிக் கடை | என்.எம்.எஸ். 1 | 56,100-00 | 1,000/- | 500/- |
| 4. ஆட்டிறைச்சிக் கடை | என்.எம்.எஸ். 2 | 67,400-00 | 1,000/- | 500/- |
| 5. மாட்டிறைச்சிக் கடை | என்.எம்.எஸ். 3 | 60,100-00 | 1,000/- | 500/- |
| 6. மாட்டிறைச்சிக் கடை | என்.எம்.எஸ். 4 | 61,600-00 | 1,000/- | 500/- |
| 7. வாகனம் நிற்பாட்டுமிடங்களில் குத்தகை அறவிடுதல் | | 13,500-00 | 1,000/- | 500/- |
| **சேவைகள்** | | | | |
| 8. குப்பை கூளங்களை அகற்றி இரட்டை மாட்டுவண்டி / உழவு இயந்திரம் பெட்டி உட்பட வாடகைக்கு விடுதல் | | | 1000/- | 500/- |

மேற்படி வைப்புப் பணம் கேள்விப் படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 11-11-1994 ஆம் திகதி 12-30 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா. சித்திகரமான கேள்விகாரர்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும். மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும். இது சம்பந்தமான ஏனைய விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. நடராசா.
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
24-10-1994

[சி-9437]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஜேசி நாம்பன் கன்று 15 மாதம் வயதுடையது — ஒன்றும், 07 மாதம் வயதுடையது — ஒன்றும் காரியாலய நேரத்தில் கீழ் விலாசத்தில் கன்றுகளை நேரில் பார்வையிட்டு 5-11-94ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் கூறுவிலையை சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி-9439)

## பால் விற்பனைக்கு

திருநெல்வேலி, யாழ்ப்பாணம், கச்சேரி, கொழும்புத்துறை, நல்லூர், கோப்பாய், கோண்டாவில், தாவடி, கொக்குவில் ஆகிய இடங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வீட்டுக்கு நேரடியாக பால் விநியோகிக்கப்படும். தொடர்பு: பொது முகாமையாளர் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய். (சி-9438)

## தவறிவிட்டது

தி. சங்காதரனின் 703510531 V இலக்க அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டைகள் அடங்கிய பிறவுண்நிற பேர்ஸ் 23-10-94 அன்று ஒளாலியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ''சக்தி'', மணியகாரன் லேன், கொக்குவில் கிழக்கு என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (33518)

மருதனார்மடம் சந்திக்கும் உரும்பிராய் திரு வீதிக்கும் இடையில் தோடு தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 'வரோதயன்' திரு வீதி, உரும்பிராய் வடக்கு. (7682)

## வினாத்தாள் திட்டமிடல்

ஆண்டு 4—11இன் மூன்றாம் தவணை வினாத்தாள்களைத் திட்டமிட்டுத் தயாரித்தல், விடைத்தாள் பகுப்பாய்வு — சகல விவரங்களும் மாதிரி வினாக்களும், படிவங்களும் கொண்ட ''மதிப்பீடு'' — ரூபா முப்பது மட்டுமே. யாழ். ஸ்ரீ சுப்பிரமணியம், ஸ்ரீலங்கா, சுன்னாகம் தனலக்குமி பொத்தக சோலைகள். (7681)

## O/L MATHS

27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (7977)

## பாலர் ஆசிரியராகலாம்

கடைசித் தகைமை க.பொ.த. (சா/த) சனி, ஞாயிறு வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். விரைவில் பதிக. பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33496)

## மணிக்கூடுகள்

புதிய கடிகாரங்கள் வாங்குபவர்களுக்கு மட்டும் அவர்களின் பாவித்த கடிகாரங்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். மணிக்கூடுகள், றேடியோக்கள் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி றோட் (வானவில் அருகில்), கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி, மானிப்பாய்வீதி, ஆனைக்கோட்டை. (சி-9514)

## விக்னா

கல்வி நிறுவனம்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**A/L 95 EVENING CLASS**

(செவ்; வியா. 4-00 — 6-00 மணி) நடைபெறுகின்றன.

BY
S. K. பிரபாகரன்

[சி-9433]

---

பார்த்தவர்கள் பாராட்டுகிறார்கள்
குடும்பத்துடன் பார்த்து மகிழ

★ நெல்லியடி மகாத்மா,
★ சாவகச்சேரி தெய்வேந்திரா

ஆகிய திரையரங்குகளில்
அகன்ற வெண்திரையில்

நிதர்சனமும்,
கலை, பண்பாட்டுக்கழகமும்
இணைந்து உருவாக்கிய

## திரு. பொ. தாசனின்
# "இன்னும் ஒரு நாடு"

தினசரி 6-30 மணி
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30மணி

[சி-9344]

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**94** பரீட்சை எடுத்த மாணவருக்கான

## DAY CLASS

[8-00 — 2-00 மணி]

கலை, வர்த்தகம் வகுப்புக்கள்

**ஆரம்பம்: 28-10-1994**

கணக்கியல் — திரு. S. K. பிரபாகரன்
அளவையியல் — திரு. A. பிரபா
பொருளியல் — திரு. ராஜேஸ்வரன்
வர்த்தகம் — திரு. சிவா

★ முதல் அலகிலிருந்து வினா-விடையுடன் கூடிய மீட்டல் பரீட்சைகளுடன் மீட்கப்படும்.

[சி-9431]

---

ஏழாலை மகாவித்தியாலய
பவள விழா நிதிக்கான
அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பின்

## முடிவுகள்

1ஆம் பரிசு — சீட்டு இலக்கம் - **3385**
2ஆம் பரிசு — சீட்டு இலக்கம் - **0067**
3ஆம் பரிசு — சீட்டு இலக்கம் - **0606**

5ஆறுதல் பரிசுகளுக்கான இலக்கங்கள்

(1) **3532** (3) **4081**
(2) **0768** (4) **4506**
(5) **0354**

குறிப்பு:
பரிசு பெற்றோர் பாடசாலை ஆசிரியர் நலன்புரிக் கழகத் தலைவருடன் தொடர்பு கொள்ளவும்.

ஐ. பாலசிங்கம்,
ஆசிரியர் நலன்புரிக் கழகத் தலைவர்.

[7678]

---

ஐயப்ப சரணம்

## அறிவித்தல்

**சுன்னாகம் தாளையடி அரிகரபுத்திர ஐயனார் ஆலய திருப்பணிச்சபை**

06-10-94ஆம் திகதி மேற்படி ஆலய மண்டபத்தில் யாழ். காவல்துறை ஆலய விசாரணைப் பொறுப்பதிகாரியின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருப்பணிச் சபை தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டு வருகிறது. ஆலயத்திருப்பணிக்கு அன்பளிப்புச் செய்ய விரும்பும் அடியார்கள் திருப்பணிச்சபை தனாதிகாரியிடம் பணத்தை ஒப்படைத்து பணத்துக்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளவும். அல்லது இலங்கை வங்கி சுன்னாகக் கிளையில் மேற்படி சபையின் சேமிப்பு கணக்கு இலக்கம் 14710 வரவிலிட்டு, 'B' இணைப்பை தனாதிகாரியிடம் ஒப்படைத்து பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளவும்.

மேலும் 06-10-1994க்கு பின்னர் திருப்பணிக்கென திருப்பணிச் சபையின் தனாதிகாரி தவிர்ந்த ஏனையோரிடம் செய்யப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கலுக்கும் திருப்பணிச்சபை பொறுப்பாளிகள் அல்ல என்பதை அறியத் தருகிறோம்.

ச. கணபதிப்பிள்ளை, தலைவர்
ச. சூரியகுமார், செயலாளர்
த ஸ்ரீவரதலிங்கம், பொருளாளர்

ஐயனார் கோயிலடி:
சுன்னாகம்.

(சி/5733)

---

## கண்ணீர் அஞ்சலி

அமரத்துவம் எய்திய விநாயக பூஜா துரந்தர், குருமணி, கிரியா வித்தகர், சிவாகம கிரியாரத்தினம்

**சிவஸ்ரீ கந்த. சிவபாதசுந்தரக்குருக்கள்**
அவர்களுக்கு

எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகிறோம். அவர்களின் ஆத்மா சாந்தி அடைய குரும்பசிட்டியூர் சித்தி விநாயகப் பெருமானை பிரார்த்திப்பதுடன், அவரின் பிரிவால் துயருறும் அவர் தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்;
சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையினரும்,
குரும்பசிட்டியூர் மக்களும்.

[7670]

---

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும்
தொழிற்திறன் அபிவிருத்தி
பயிற்சி நெறிகளுக்கான

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**பயிற்சி நெறிகள்:**

1. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சிநெறி
2. ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சிநெறி
3. உடையமைத்தல் பயிற்சி நெறி
4. தையல் இயந்திரம் திருத்தற் பயிற்சி நெறி (பெண்கள் மட்டும்)

**பயிற்சிநெறி நடைபெறும் இடம்:**
106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**தகைமைகள்:**

1. தமிழ்/ஆங்கிலம் சுருக்கெழுத்து பயிற்சி நெறிக்கு ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் தமிழ்/ஆங்கிலம் மொழிகளில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. ஏனைய பயிற்சி நெறிக்கு ஜி. சி. ஈ (சாதாரணம்) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி:**
**10-11-1994**

★ விண்ணப்பங்கள் யாவும் சுயவிவரங்களுடன்

தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத்தெரு.
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்

(சி/9436)

---

காரைநகர்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)
374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்
### வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் திரு. கோ. விக்னேஸ்வரன் அவர்கள் தலைமையில் 17-11-94 வியாழக்கிழமை மு. ப. 9-00 மணிக்கு வட்டுக்கோட்டை மாவடியில் உள்ள காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது. பிரேரணைகள் ஏதும் கொண்டு வர விரும்பின் எழுத்து மூலமாக 04-11-94இற்கு முன்னர் செயலாளர், காரைநகர் ப. நோ. கூ. சங்கம். 374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். இச்சங்கத்தின் பொதுச் சபை பிரதிநிதிகளால் தரப்பட்ட முகவரிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

24-10-94.

க. நடராசா
செயலாளர்

(சி-9435)

---

பாவியுங்கள்

# அண்ணா பற்பொடி

25 வெற்று பற்பொடி பக்கட்டுகளைக் கொடுத்து ஒரு அப்பியாசக் கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.


அண்ணா தொழிலகம்,
இணுவில்.

[சி-9529]

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 17 — 08 — 1953



விண்ணில்: 29 — 10 — 1991

**அமரர் குகதாசன் (சிவம்)**

**திதி: 26 — 10 — 1994**

அன்பான தந்தையே! ஆண்டுகள் மூன்றானாலும்
அழுகுதையா எம் நெஞ்சு பிள்ளைகள் எம்-
வாழ்வுக்காய்
பெரும்பாடுபட்டீர்கள் அப்பா! பெற்ற துன்பம் -
யாரையும்
புன்னகையில் மறைத்தீர்கள் குழந்தைகளாய் -
இருந்தோம்
கொஞ்சி மகிழ்ந்தீர்கள் அப்பா பள்ளி செல்லும் -
பருவத்தில்
காலடி வைக்கும் முன் பாகாய்ப் பறந்தீர்கள்
நண்பன் ஒருவன் நயவஞ்சகனாய் மாறினான் -
அப்பா!
நாம் வாழ ஆசை கொண்டு நமக்காக -
உழைத்தீர்கள்
நாம் வாழும் நேரத்தில் நம்மை ஏன் மறந்தீர்கள் -
அப்பா!
குடும்பத்தின் தலைவனுமாய் கொண்டவன் -
நற்கணவனுமாய்
அன்பான அப்பாவுமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் -
வேளையிலே எங்கப்பா போனீர்கள்.

தங்கள் ஆத்ம சாந்திக்காக கண்ணீரால் மலர் சொரிந்து மலர் அஞ்சலி செய்யும்;

மனைவி, பிள்ளைகள்.
(... கணேசானந்தா)

(33490)

---

தீபாவளி திருநாளை முன்னிட்டு
## நியூ ஹப்பி ரெக்ஸ்ற்
வழங்கும்
மாபெரும்
# மலிவு விற்பனை

இன்றே நாடுங்கள்!

## புதிய மகிழ்ச்சி ஆடையகம்

(நியூ ஹப்பி ரெக்ஸ்ற்)
146, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்

(சி-9532)

---

யாழ். மத்திய கல்லூரியின்
## உதைபந்தாட்ட நூற்றாண்டு விழா

இன்றைய ஆட்டம்: பிற்பகல் **2-15**க்கு
**HARTLEY VS. J/CENTRAL**

(33495)

---

## தவம் இயந்திரவியல் தொழிலகம்

பலாலி வீதி, கோண்டாவில்.

**வியாபாரிகளே, வாடிக்கையாளர்களே!**

குழாய்க் கிணறுகளுக்குரிய பல்வேறு விதமான புட் வால்வுகளையும் கப்ளிங், நிப்பின் போன்றவற்றையும் கைப்பம்புகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

[7677]

---

## விற்பனைக்கு

நல்லினத் தோடை, எலுமிச்சை, மா, பலா பப்பாசி, கொய்யா, மாதுளை, கொடித்தோடை முதலிய பழமரக் கன்றுகளும் தென்னை, கமுகு, அகத்தி, நெல்லி, மலை வேம்பு, சமண்டலைக் கன்றுகளும் விற்பனை செய்யப்படுகின்றன.

★ நியாய விலை
★ நல்லினம் உத்தரவாதம்


சைவ வித்தியாவிருத்திச் சங்கம்
முத்துத்தம்பி ம. வி. முகப்பு
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(33515)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 17 — 08 — 1953



அம்பாள் அடியில்: 29 — 10 — 1991

**அமரர் ஆறுமுகம் குகதாசன்**
**(சிவம்)**

(பத்தமேனியை பிறப்பிடமாகக் கொண்டவரும் மிருசுவில் கண்ணகை அம்மன் கோயிலில் அமரத்துவம் அடைந்த ஆறுமுகம் குகதாசன்.)

ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரோடி
வாழையடி வாழையாக நாம் வாழ நினைக்கையிலே
பொன்னான உங்கள் மேனியிலே காலன் அறியாத -
நோயாக்கி கவர்ந்தானோ
கண்ணின் கருமணியாய் காத்து வந்த எங்களை
விட்டு விட்டே
கார்கால மேகமென மறைந்ததேனோ.
எமக்கெல்லாம் அன்பு, பாசம் அள்ளி வழங்கிவிட்டு
இறையடி சேர்ந்தீரே. இளவயதில் நீர் மறைந்தது
விதியா அல்லது சதியா
நீ இருப்பாய் எமக்கென்ன என்றிருந்தோம்
எம் கனவு கணப்பொழுதில் பகற்கனவாய் ஆகுமென
ஆர் நினைத்தார்.
மின்னாமல், முழங்காமல் விழுந்ததே இடி எம் மீது
ஆண்டு மூன்று சென்றாலும் ஆறவில்லை
எம் துயரம்
விழுதுகளை தாங்கி நின்ற ஆலமரம் சாய்ந்து
விடில் பறவைகள் நாம் நிழல்தேடி எங்கு
செல்வோம்.

மூன்று வருடம் ஓடி மறைந்தாலும், எங்கள், இதயங்களில் எப்பொழுதும் நிலைத்து நிற்கிறீர்கள்.

உங்கள் ஆத்மா இறையடிசேர என்றென்றும் பிரார்த்திக்கும்;

பப்பா, அம்மா, பிள்ளைகள்,
குடும்ப நண்பன் சந்திரதேவா குடும்பம்,
சகோதர, சகோதரிகள், மச்சான்மார்,
மச்சாள்மார், மருமக்கள், பெறாமக்கள்,
சாரதி நாத்தா, உற்றார், உறவினர்,
நண்பர்கள்

தகவல்;
அ. ஆறுமுகம்,
பழைய வாய்க்கால்,
மிருசுவில்.

(33510)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## பாதுகாப்பு வரி எதற்காக?

1993 ஆம் ஆண்டில் பாதுகாப்பு வரியாக 660 கோடி ரூபா அறவிடப்பட்டிருப்பதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அறிக்கை ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது. இது மொத்த வரிகளில் 12.4 சதவீதம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கில் அரசாங்கம் நடத்தி வரும் போர்ச் செலவுக்கென்றே பாதுகாப்பு வரி விசேடமாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

இறக்குமதியாளர்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள் போன்றவற்றிடம் இருந்தே பாதுகாப்பு வரி அறவிடப்பட்டாலும், அதற்குரிய பணத்தைச் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் பொதுமக்களிடம் இருந்தே திரட்டுகின்றன. அதாவது பாதுகாப்பு வரி மக்களிடமிருந்து நேரடியாக இல்லாமல் மறைமுகமாகத் திரட்டப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்தி குன்றிய இலங்கை போன்ற நாடுகளில், மக்கள் பாதுகாப்பு வரி செலுத்துவது என்பது அவர்களது வாழ்க்கைத் தலைமேலான வேண்டாத சுமையே. மிகக் குறிப்பாக நாட்டு மக்களில் அறுபது சதவீதத்தினருக்கு மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள்.

மக்களின் வாழ்க்கை நிலை இவ்வாறு கீழ் மட்டத்தில் இருக்கும் போது, அவர்களிடம் இருந்து பாதுகாப்பு வரி அறவிடுவது அநீதியானதும், அநியாயமானதும் ஆகும். அவர்களது வாழ்க்கையைச் சுரண்டிச் சீரழிப்பதாகும்.

தமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளைக் கேட்கும் தமிழர்களின் விவகாரம் முழுக்க முழுக்க அரசியல் பிரச்சினை. அதற்கு அரசியல் தீர்வே உகந்த வழி.

ஆனால், கடந்த பதினேழு வருடங்களாக ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசுகள், தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வைக் காணவே திட்டமிட்டுச் செயற்பட்டன. தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை இராணுவத் தீர்வின் மூலம் நசுக்கி அவர்களைப் பலவீனமாக்குவதே முந்திய அரசுகளின் முழுத் திட்டமுமாக இருந்தது. அதற்காகவே அது வடக்கு — கிழக்கில் போரைப் பிரகடனப்படுத்தி நடத்தியது. போருக்கென்று ஒதுக்கப்படும் பணத்துக்கு மேலதிகமாக பாதுகாப்பு வரியையும் அறவிட்டது.

வருடமொன்றுக்கு 2,500 கோடி ரூபா செலவில், கடந்த நான்கரை ஆண்டுகளாக நடத்திய போரினால் கண்டது என்ன? போரில் வென்று தமிழர்களை ஒடுக்க முடிந்ததா? இராணுவத் தீர்வினது கரைகண்டு, தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்க முடிந்ததா? இல்லை.

தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை நாடாமல் அரசியல் தீர்வையே காண்பது என்று பதினேழு வருடங்களுக்கு முன்னரே ஐ.தே.க அரசு திட்டவட்டமான ஒரு முடிவை இதய சுத்தியுடன் செயற்படுத்தி இருப்பின், நாடு இந்தளவுக்குச் சீரழிந்திருக்காது. பேரழிவுகள் ஏற்பட்டிருக்கா. அரசியல், பொருளாதார சமூகத் தாழ்வு நிலைகள் தோன்றியிருக்கமாட்டா. மனித விழுமியங்கள் மரணித்திருக்கமாட்டா.

ஆகையால், இப்போதைய சீரழிந்த நிலையிலிருந்து நாடு மீண்டும் எழ வேண்டுமானால், புதிய அரசு தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தான் என்ற உறுதியான நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். இன, மத, குல பேதமற்ற சமஉரிமை, சமநீதி, சம வளர்ச்சி, சம மேம்பாடு என்ற கோட்பாட்டை முன்வைத்துச் செயற்பட்டால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது ஒன்றும் கடினமல்ல தீர்வு நோக்கத்திலிருந்து இராணுவ அம்சம் அகற்றப்பட வேண்டும் இராணுவத் தீர்வை மறந்து விட வேண்டும். அதற்கு முதற்படியாக பாதுகாப்பு வரியையும் நீக்கட்டுமே.

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் வாந்திபேதி நோய் அபாயம்!

## மூடப்பட்டிருந்த வார்ட் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ். நகரப்பகுதியில் மீண்டும் வாந்திபேதி (கொலரா) நோய் பரவ ஆரம்பித்துள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரியில் மூடப்பட்டிருந்த கொலராவார்ட் நேற்று முன்தினம் முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதி கமால் வீதியில் உறவினர் வீட்டில் தங்கியிருந்த ஒருவரே இந்நோயினால் பீடிக்கப்பட்டு உடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானைச் சேர்ந்த தங்கராசா சதீஸ் (வயது 22) என்பரே இந்நோயினால் பீடிக்கப்பட்டவராவார்.

கடந்த இரண்டுமாதமாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பதாக அவர் தெரிவித்தார். (இ-15-13)

## ஆங்கில நூல் வெளியீட்டு விழா

வண பிதா எஸ். எம். சவேரி எழுதிய 'கத்தோலிக்க—இந்து மோதல்களும், உறவுகளும்'' என்ற ஆங்கில நூலின் வெளியீட்டு விழா இன்று புதன் கிழமை நடைபெற உள்ளது.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் பி.ப. 4மணிக்கு இடம்பெற உள்ள வெளியீட்டு விழாவைத் தொடர்ந்து திருமறைக் கலாமன்றம் வழங்கும், மத—சமூக விழுமியங்களை எடுத்துக் காட்டும் புதிய வகை நடாகமான ''தேடல்'' சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும். (அ)

காமினி கொலை:

# திறந்த மனதுடனேயே அரசு விசாரிக்கிறது

## தர்மசிறி சேனநாயக்கா கூறுகிறார்

காமினி திஸநாயக்காவின் படுகொலைக்கு யார் பொறுப்பு என்பது குறித்து அரசு திறந்த மனதுடனேயே விசாரணை நடத்துகின்றது.

தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா முன் கண்டவாறு தெரிவித்தார்.

இப்படுகொலைபற்றி பூரண விசாரணை நடைபெற்று வருகின்றது இச்சம்பவத்துக்குக் காரணம் விடுதலைப் புலிகள் தானா என்பதை இப்போது சொல்ல முடியாது என்றும் அவர் கூறினார். (இ-எ)

## இலவச மூக்கு கண்ணாடி

யாழ்ப்பாணம், ஒக். 26

சுன்னாகம் லயன்ஸ் கழகம் பார்வை குறைந்தவர்களுக்கு இலவசமாக மூக்கு கண்ணாடிகளை வழங்கவுள்ளது.

தகுதியானவர்கள் சுன்னாகம் லயன்ஸ் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-17)

# கட்சித் தலைவர்கள் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.26

அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பாதுகாப்பை அரசாங்கம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. தே.க.சார்பில் போட்டியிட்ட ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸநாயக்கா படுகொலையுண்டதை அடுத்து அரசுஇந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

தென்மாகாணத்தில்

# தமிழ் பிள்ளைகள் ஆண்டு 5க்கு மேல் கல்வியை தொடர முடியாத நிலைமை

## பிரதி அமைச்சர் கவலை

ஹட்டன், ஒக். 26

''தென் மாகாணத்தில் வாழும் தமிழர்களின் பிள்ளைகள் தமிழ் மொழி மூலம் 5 ஆம் ஆண்டுக்கு மேல் கல்வி கற்க முடியவில்லை.''

உள்ளூராட்சி கூட்டுறவு மாகாண சபைகள் பிரதி அமைச்சர் சந்திரசிறி கஜதீர மேற்கண்டவாறு கூறினார்

ஹட்டனில் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் செங்கொடிச் சங்க அலுவலகத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அவர் உரை நிகழ்த்துகையில் மேலும் கூறியதாவது:—

தமிழர் ஆசிரியர்கள் இப்பகுதிகளில்இல்லாததாலேயே இந்த நிலை.

இதுபோலவே திருமண, பிறப்பு, இறப்புப் பதிவாளர்கள் தமிழ் தெரிந்தவர்கள் இல்லாத காரணத்தால் தகவல்களைப் பிழையாக எழுதி விடுகிறார்கள்; சிலவேளைகளில் கெட்ட வார்த்தைகளிலும் எழுதிவிடுகிறார்கள் என்றார் அவர்.

வரவேற்பு வைபவத்துக்கு செங்கொடிச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஓ. ஏ— இராமையா தலைமை வகித்தார். (க)

## பிரதமர்-ராணுவ.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இருந்து வெளியாகும் சமிக்ஞைகள், ஆயுதப் படையில் உள்ள சகல தரத்தினர் மத்தியிலும் மேலும் குழப்பநிலையை ஏற்படுத்துவதைத் தவிர்க்குமுகமாக, விஷயங்களை விளக்கி பிரதமரின் அலுவலகம் அல்லது இராணுவத் தளபதி அறிக்கை ஒன்றை வெளியிடுவதன் தேவை பற்றி அச்சந்திப்பில் வற்புறுத்தப்பட்டது.

பிரதமரின் பி. பி. ஸி. பேட்டி, இராணுவத்தின் அடிநிலைவரை பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியது. பேட்டியில் வெளியான கருத்துகளை சிப்பாய்கள் தங்கள் கனிஷ்ட அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டி, இதன் அர்த்தம் என்ன என்று கேட்டனர் என்றும் —

பிரதமரின் பேட்டியின் அர்த்தத்தை புரிந்துகொண்டு பதிலளிக்க சிரேஷ்ட அதிகாரிகள் முன்வராததால், கனிஷ்ட அதிகாரிகளும் சிப்பாய்களும் விளக்கம் கூற முடியாமற்போய்விட்டதாகவும் '' சண்டே ஒப்சேவர் '' தகவல் வெளியிட்டது.

இராணுவப் பாசறைகளிலும் அதிகாரிகளின் விடுதிகளிலும் பிரதமரின் கருத்துக்கள் தீவிரமாக விவாதிக்கப்பட்டதாகவும்—

முடிவு காணப்படாமலேயே அவ்விவாதங்கள் முடிந்தன என்றும் — மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சைத் தமது பொறுப்பில் வைத்திருக்காத பிரதமரிடம் இருந்து இக்கருத்துகள் வந்திருப்பதால் அவை பற்றி கவனம் செலுத்தப்படக்கூடாது என்று சில உயர் இராணுவ அதிகாரிகள் கருத்து வெளியிட்டனர்.

இன்னும் சில இராணுவ அதிகாரிகள் பிரதமரின் கருத்துக்களை பாரதூரமாக எடுத்துக் கொண்டு, அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் விதத்தில் இராணுவத் தளபதி ஜெரிடி சில்வா ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்தனர்.

இன்னும் சில படை அதிகாரிகள், இராணுவ சேவையில் தற்சமயம் இல்லாத வேறு சிலரை இலக்குவைத்தே பிரதமர் இக்கருத்துகளை வெளியிட்டதாக கூறினர்.

எனினும் இராணுவத்தினரிடையே பொதுவான அபிப்பிராயம் ஒன்று நிலவியது.

சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளை பிரதமர் பெயர்கூறி விமர்சித்து இருக்க வேண்டும் என்பது தான் அது.

இப்பின்னணியில் தான் பிரதி அமைச்சர் ரத்வத்தை பல இரராணுவ உயர் நிலை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது அவர்கள் பிரதமரின் பேட்டி பற்றிய தங்கள் அதிருப்தியை பகிரங்கமாக வெளியிட்டனர் என்றும்—

அதனை அடுத்தே இராணுவத் தளபதி — பிரதமர் சந்திப்பு இடம் பெற்றது என்றும் —

இப்போது இணக்கமான சுமுகநிலை இரு தரப்பினர் மத்தியிலும் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## காமினி கொலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துலக்க முடியும் என்று நம்பிக்கை தெரிவித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

இத்தாக்குதலை நடத்தியவர் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒரு பெண் போராளியே என இராணுவம் சந்தேகம் எழுப்பியிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது. [உ-எ-4]

## கொலைக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அபிப்பிராயங்களை [illegible] வேண்டியுள்ளது. — என்றார் அவர்.

## காமினியின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறிமா திஸாநாயக்கா ஆகிய இருவரின் பெயர்கள் மட்டுமே பரிசீலிக்கப்பட்டதாகவும் —

தற்போதைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் பெயர் பரிசீலிக்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

நேற்று ஆரம்பம் முதல் ரணில் விக்கிரமசிங்காவே வேட்பாளராகத் தெரிவு செய்யப்படுவார் என்ற எண்ணம் கட்சி வட்டாரங்களில் பரவலாக நிலவி வந்ததாக பி.பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் ரஷிகா இக்பால் தெரிவித்தார்.

ஆனால் கடைசி நேரத்தில் — பலரையும் ஆச்சரியப்படத்தக்க வகையில் — சிறிமா திஸாநாயக்கா வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார்

இது ஓர் அரசியல் முடிவு என்பதிலும் பார்க்க அழுத்தத்தின் முடிவு என்று கூறுவதே பொருத்தமானதாக இருக்கும். — என்றார் பி.பி. ஸி. செய்தியாளர்.

நேற்று ஐ.தே.கவின் குழுக் கூட்டங்கள் கட்சித் தலைமையகமான ஸ்ரீ கோத்தாவில் நடைபெற்ற போது அங்கு வெளியில் பல நூற்றுக் கணக்கில் திரண்டிருந்த கட்சி ஆதரவாளர்கள் சிறிமா திஸாநாயக்காக்கு ஆதரவாகக் குரல் எழுப்பிய வண்ணம் இருந்ததாக செய்திகள் தெரிவித்தன. (உ)

## உயர்மட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகிக்கிறார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலி சுட்டுக் கொல்லப்பட்டதும் அவரது மனைவி சிறிமானி அக்கட்சியின் தலைவரானார். இப்போது அமைச்சராகவும் உள்ளார்.

குண்டுவெடிப்பில் பலியான முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி ஹேமா சிறிது காலம் அரசியலுக்குள் நேரடியாக வராமல் இருந்தார். எனினும் இப்போதைய ஜனாதிபதி தேர்தலோடு ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு அமைப்பாளராக உள்ளார்.

காமினி திஸாநாயக்கா குண்டு வெடிப்பில் மரணமானதும் அவரது மனைவி சிறிமா ஐ.தே.கட்சியின்ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறிமாவோ, சந்திரிகா, சிறிமானி, ஹேமா, சிறிமாஎன்று ஐந்து விதவைகள் இப்போது [illegible] (அ)

## எதிர்க்கட்சித்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிவை எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது என்றும்—

பி.பி.ஸி நேற்றிரவு அறிவித்தது.

ஆனால்—

ரணில் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார் என்றும்—

அந்தத் தெரிவை ஐ. தே கவின் நிறைவேற்றுக் குழு அங்கீகரித்தது என்றும் இந்திய வானொலி நேற்று நள்ளிரவுக்குச் சற்றுமுன் அறிவித்தது.

# சிறில் ரணதுங்கா முன்னிலையில் பிரபாவுக்கு சின்னமணி பாராட்டு

## லண்டன் மாநாட்டில் வாக்குவாதம்

லண்டன், ஒக். 26

லண்டனில் இலங்கைத் தூதர் ஜெனரல் சிறில் ரணதுங்கா அளித்த பிரிவுபசார விருந்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனை பாராட்டி ஹரோம் நகர மேயர் திரு. சின்னமணி பேசினார்.

இது அந்த வைபவத்தில் கலந்து கொண்ட சிங்களப் பிரதிநிதிகள் சிலருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

அவர்கள் சின்னமணியுடன் வாக்குவாதப்பட்டனர். இந்த வாய்த்தர்க்கங்கள் ஜெனரல் சிறில் ரணதுங்காவுக்கு புதியவை என்றபடியால், அவர் ''சபாநாயகர் அவர்களே அமைதியைக் கொண்டு வாருங்கள்'' — என்று விண்ணப்பிக்க வேண்டியதாயிற்று.

ஆம். அவ்விருந்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டவர் இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் கே.பி. இரத்னாயக்கா ஆவர்.

36 பேர் மட்டுமே அவ்விருந்தில் கலந்து கொண்டனர்.

சின்னமணியும் அழைக்கப்பட்டிருந்தார்.

ஜெனரல் ரணதுங்கா விருந்தினர்களைத் தெரிவு செய்தவிதம் பிடிக்காத சிங்களப் பிரதிநிதிகள், அவர் இனி ஒழுங்கு செய்யும் பிரியாவிடை வைபவங்களை பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# காமினியின் கொலைக்கு சிங்களவரில் ஒரு பிரிவும் காரணமாக இருக்கலாம்

## அர்ஜுனா சிற்றம்பலம் பி.பி.ஸிக்கு பேட்டி

கொழும்பு, ஒக். 26

காமினிதிஸநாயக்காவின் படுகொலைக்கு சிங்களவர்களில் ஒரு பிரிவினரே காரணமாக இருக்கலாம்.

லண்டனில் உள்ள அர்ஜுனா சிற்றம்பலம் பி.பி ஸிக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரித்தார்.

பிரதமர் சந்திரிகா சமாதான முயற்சியில் இதயசுத்தியுடன் ஈடுபட்டிருந்த சமயம் இப்படுகொலையை விடுதலைப்புலிகள் ஏன் செய்ய வேண்டும் என்று கேட்ட அர்ஜுனா சிற்றம்பலம்—

'கொழும்பில் இருந்துதமக்கு கிடைத்த ஒரு தகவலின் படி, காமினி பேசியமேடை, குண்டு வெடிப்பில் முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளது. அப்படியானால் குண்டு மேடைக்கு கீழ் வைக்கப்பட்டிருக்க வேண்டும்' —என்று தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் தொடருமா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்—

''ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு சமாதானப் பேச்சுகள் நடத்தப்படும் சாத்தியம் இல்லை. அது பிரதமர் சந்திரிகாவுக்கு தற்கொலை முயற்சியாகவே இருக்கும். ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் ஆணையைப் பெற்று ஜனாதிபதியானதும் அவர் சமாதானப்பேச்சுகளைதொடரலாம். நாட்டின் நிலைவரம் ஸ்திரமானதும் சமாதானப் பேச்சுகளை ஏன் தொடங்கக் கூடாது? ''—என்று அவர் சொன்னார்.

காமினிக்கு அவர் அங்கம் வகித்த ஐக்கியதேசியக்கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு இருந்தது.

கட்சியை விட்டு வெளியேறிய அவர் கட்சிக்குள் மீண்டும் நுழைந்து தலைமைப் பதவியை பிடித்த விதம் அவரின் கட்சிக்காரர்களுக்கே பிடிக்கவில்லை என்றும் அவர் கூறினார். (இ-எ)

## சிறீபுரத்தில் கற்பகச்சோலை

யாழ்ப்பாணம் ஒக். 26

தமிழீழத்தின் பனை வளத்தை 2000 ஆண்டளவில் இரட்டிப்பாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட பாரிய தொரு திட்டமாகிய கற்பகச் சோலை பனை நடுகைத் திட்டத்தின் அடிப்படையில் வடமராட்சி சிறீபுரம் பனை பயிற்சி நிலையத்தை அண்மித்த பகுதிகளில் 10ஆயிரம் பனை விதைகள் நாட்டப்பட்டு வருகின்றன.

கற்பகச்சோலை பனை நடுகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்திவரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினரால் நேரடியாக இப்பனை நடுகை மேற்கொள்ளப்படுகின்றது. மேற்படி நிறுவனம் இம்மாத முற்பகுதியில் கற்பகச்சோலை திட்டத்தின் கீழ் 30 ஆயிரம் பனை விதைகளை யாழ். கல்லுண்டாய் உப்பளப்பகுதியில் நடுகை செய்தமை குறிப்பிடத்க்கது. (ஒ)

# கமக்காரர் அறிமுக அட்டை உள்ளோருக்கே உரம்

யாழ்ப்பாணம் ஒக். 26

கமக்காரர் அறிமுக அட்டைகளுக்கே உரம், கிருமிநாசனி போன்றவை வழங்கப்படும் என யாழ், மாவட்ட வேளாண் இடுபொருள் வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

கமக்காரர் அறிமுக அட்டை இல்லாதவர்களுக்கு இவை வழங்கப்படமாட்டா எனவும் மேற்படி கழகம் மேலும் தெரிவித்துள்ளது.

# கூத்துக் கலையைபேணுதல் எமது இன்றைய தேவை

## கலைஞர் பாராட்டு விழாவில் உரை

''மக்களின் கலைகளுக்கு உயிரூட்டுபவர்கள் மரணிப்பதில்லை. சாதி, மத. கட்டுக்களை அவிழ்த்தெறிந்து இக்கலைஞர்கள் வளர்த்தெடுத்த கூத்துக் கலையை முன்னெடுக்கும் முயற்சிகளை வரவேற்போம். கூத்துக் கலையை பேணுவதில் மேலும் கவ்னம் செலுத்த வேண்டும். அது இன்றைய தேவை''.

பாஷையூர் நாட்டுக் கூத்து வளர்ச்சிக் கழகம் கூத்துக் கலைஞர் திரு, இ. ராசிக்கு நடத்தியபாராட்டு வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து பேசிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

கவிஞர் மு. சிங்கராயர் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தமிழ் மண்ணில் தர்மப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மூத்த கலையாகிய கூத்தினைப் பேணி வளர்த்து வரும் கலைஞர்களை அவர்கள் வாழும் போதே கௌரவித்தல் வேண்டும்''என்றார்.

கவிஞர் காரைசெ.சுந்தரம்பிள்ளை பேசுகையில் கூறியதாவது;

''விலை மதிப்பற்ற கூத்துக் கலையை சமூகத்தின் கீழ் மட்டத்தில் உள்ளோர் மட்டுந்தான் வளர்த்து வந்தனரென்பது தவறு. பிராமண குலத்தவர் கூட சிறப்பாகப் பங்களிப்புச் செய்திருக்கின்றனர்'' என்றார்.

கலைஞர் திரு. இ. ராசி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களால் பொன்னாடை போத்தப்பட்டு ''நாட்டுக் கூத்துக்கலை வேந்தன்'' என்னும்பட்டம் அளித்தும் கௌரவிக்கப்பட்டார். மறைந்த அண்ணாவியார் ம. பாவிலுப்பிள்ளை நினைவு விருதும் வழங்கப்பட்டது.

''ராசி என்றொரு கலைஞன்'' என்னும் மலரும் வைபவத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அருட்திரு சீ. ஜீ. ஜெயக்குமார் அடிகள் ,சட்டத்தரணி ரீ எம். அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் பாராட்டு வழங்கினர்,

கலை நிகழ்வில் ''பாதையின் படிக்கற்கள்'' ''நிலவும் நெருப்பும்'', ''கட்டப் பொம்மன்'' ஆகிய நாடகங்கள் இடம் பெற்றன.

## ரணிலின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதில் அக்கறையாக உள்ளன.

அரசமைப்புப்படி ஜனாதிபதி தேர்தலை தவிர்ப்பதற்கு வாய்ப்பில்லாததாலேயே அத்தேர்தல் வேறு வழியின்றி இப்போது நடத்தப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் யார் வென்றாலும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படுவது பெரும்பாலும் நிச்சயமான ஒன்று.

அந்த முறையை ஒழிப்பதில் நாடாளுமன்றத்துக்கு பெரும் பங்கு உண்டு. அந்த வகையில் நாடாளுமன்றத்தில் தனது கட்சியின் தலைவராக — எதிர்க் கட்சித் தலைவராக — இருக்கப் போகும் ரணில் விக்கிரமசிங்காவுக்கு தொடர்ந்து கட்சிக்குள் செல்வாக்கு இருக்கும். — இவ்வாறு பி. பி.ஸி. செய்தியாளர் குறிப்பிட்டார்.

சிறிமா திஸாநாயக்கா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும் —

நாடாளுமன்றத்தில் உள்ள தனது கட்சி உறுப்பினர்களை பொ. ஐ. மு. அரசுடன் சேர்ந்து வாக்களிக்கச் செய்வதன் மூலம் —

ஜனாதிபதி ஆட்சிமுறையை செயல் இழக்கச் செய்து சிறிமா திஸாநாயக்காவை செல்லாக்காசு ஆக்க முடியும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. [உ[

## கற்கை நெறி

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை பொது வாழ்வில் பிரயோக எந்திரப் பொறியியல் எனும் அடிப்படைக் கற்கை நெறிக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. இக்கற்கை நெறியில் சேர்ந்து பயன்பெற விரும்புவோர் இன்று புதன்கிழமைக்கு முன்னதாக புறநிலைப்படிப்புக்கள்அலகில் பதிவு செய்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 26

நீதிமன்ற பணியாளர் அனைவருக்குமான விசேட கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக தமிழீழ நிர்வாக சேவையினர் அறிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் இந்துக் கல்லூரி

வருடாந்த

**இல்ல விளையாட்டுப் போட்டி - 1994**

காலம்: வியாழக்கிழமை 27- 10- 1994

நேரம்: பி. ப 2 மணி

பிரதமவிருந்தினர்:

திரு. அ. பற்குணன்

(பொறியியலாளர், கொழும்பு)

பரிசில் வழங்குபவர்:

திருமதி. ஜெயலட்சுமி பற்குணன்

பழையமாணவர்கள், பெற்றோர்கள் தயவுசெய்து இவ் அழைப்பினை ஏற்கவும். தங்கள் வருகையை ஆவலுடன் எர்திபார்த்திருக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்

(சி/9443)


## ஊரடங்கு

கொழும்பு, ஒக். 26

காமினியின் கொலையை அடுத்து நாடு முழுவதிலும் பிறப்பிக்கப்பட்ட பின்னர் நேற்று அதிகாலை 4 மணிக்கு நீக்கப்பட்ட ஊடரங்கு, மீண்டும் நேற்று இரவு 8 மணிக்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

ஊரடங்கு இன்று அதிகாலை 4 மணிக்கு நீக்கப்படும் என்றும் மறு அறிவித்தல் வரை இரவு நேர ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என்றும் பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது. (இ)

## தாழமுக்கம்

சென்னை, ஒக். 26

வங்கக் கடலில் இலங்கையின் தென்மேற்குப் பகுதியிலும் வட தமிழ்நாட்டின் கடற்கரையோரப் பகுதியிலும் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக அடுத்து வரும் 48 மணித்தியாலங்களில் பலத்த மழை பெய்யக்கூடுமென இந்திய வானொலி அறிவித்தது.

இதேவேளை—

இன்று பிற்பகலிலும் மாலையிலும் நாட்டில் அநேக பகுதிகளில் இடியுடன் கூடிய மழையும் கடும் காற்றும் வீசக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் கொழும்பில் அறிவித்தது. (ஒ-4)

## தபால் மூல வாக்களிப்பு

கொழும்பு, ஒக். 26

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும்.

சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை வாக்களிக்கத் தவறுவோருக்கு நவம்பர் 9 ஆம் திகதிக்கு முதல் இன்னொரு திகதி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தேசிய அரசு அமைப்பது குறித்து சிந்திக்க வேண்டும்

## இப்படிக் கூறுகிறார் தொண்டா

கொழும்பு, ஒக். 26

நாட்டில் வன்செயல்களைத் தடுக்க ஏதுவாக தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து சிந்திக்கவேண்டும்.

இ.தொ.கா. தலைவரும், எம்.பியுமான எஸ். தொண்டமான் காமினியின் படுகொலை தொடர்பாக விடுத்த இரங்கல் செய்தியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் சமாதானத்தையும், அமைதியையும் நிலைநாட்டி, ஸ்திர நிலையை ஏற்படுத்தக் கூடியதான அமைச்சரவையைக் கொண்ட தேசிய அரசே தற்போது தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-எ-6)

## சந்திரிகாவின் பிரசாரம் சனி வரை இல்லை

கொழும்பு, ஒக். 26

எதிர்வரும் சனிக்கிழமை வரை பிரதமர் சந்திரிகா ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளமாட்டார் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

## இன்னும் 92 பேர் ஆஸ்பத்திரியில்!

கொழும்பு, ஒக். 26

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த சுமார் 92 பேர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இன்னும் சிகிச்சைபெற்று வருகின்றனர். என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் குண்டு வெடிப்பில் 300 க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்பது தெரிந்ததே. (ஒ-எ-6)

## ஒரு வாரத்துக்கு பூரணபாதுகாப்பு!

கொழும்பு, ஒக். 26

கிராண்ட்பாஸில் குண்டு வெடிப்புத் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்துக்கு ஒரு வார காலத்துக்கு பூரண பாதுகாப்பும் காவலும் வழங்கப்படும் என்று இரகசியப் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-6)

## கிரிக்கெட் அணி காமினிக்கு அஞ்சலி

கொழும்பு, ஒக். 26

காமினி திஸாநாயக்கா படுகொலையுண்ட செய்தியை கேள்விப்பட்டதும் ஸிம்பாப்வேயில் கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்ட இலங்கை அணி ஆட்டத்தை நிறுத்தி ஒருநிமிட மௌனாஞ்சலி செலுத்தியது.

காமினி இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-6)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 26

மழைகாலத்தில் பரவும் தொற்று நோய்கள் பற்றியும் அவற்றைத் தடுப்பது பற்றியுமான கருத்தரங்கு இன்று புதன்கிழமை நண்பகல் 12.30 மணி அளவில் அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இச்சுகாதாரக் கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வைத்திய கலாநிதிகள் டாக்டர் எஸ். பி. ஆர். சிர்மாறன், டாக்டர் க. சிவபாலன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

★ ★ ★

பாடசாலைக் கல்வியை முழுமையாக முடிக்காமல், மாணவர்கள் இடைநடுவில் நிறுத்துவதைத் தடுக்குமுகமாக —

அவர்களுக்கு அறிவுரை வழங்கும் விதத்திலான கருத்தரங்கு யாழ். சென்.ஜோசப் கல்லூரியில் இன்று நண்பகல் ஒருமணிக்கு நடைபெறும்,

யாழ். றோட்டறக் கழகத்தின் ஆதரவில் நடச்கும் இக் கருத்தரங்கில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் கலந்து கொள்வார். (அ)

## ரூபவாஹினி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடிப்புக்கருவிகளும் பறிக்கப்பட்டு தரையில் அடித்து நொறுக்கப்பட்டன. அவர்களின் வாகனமும் சேதமாக்கப்பட்டது.

தாக்குதலை நடத்தியோரிடமிருந்து மதுவாடை வீசியதாகவும்—

பொலீஸார் தடுக்க, தடுக்க அதை மீறித்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்—

தாக்குதலில் படப்பிடிப்பாளர் ஒருவர் கண்ணில் காயமுற்றதாகவும் ரூபவாஹினி தெரிவித்தது.

தாக்குதலை தடுக்க பொறுப்பு வாய்ந்த பிரமுகர்கள் எவரும் முன்வரவில்லை என்று கூறப்பட்டது. [உ-4]


## பிறந்தநாள் வாழ்த்து

யாழ். கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் உள்ள தனது இல்லத்தில் பிறதந் நாளைக் கொண்டாடும் எமது தாவரவியல் ஆசிரியர் திரு. V. S. குணசீலன் அவர்கள் எல்லா நலனும் பெற்று நலமுடன் வாழ எங்கள் நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

**94 A/L** உயிரியல்
மாணவர்கள்
யாழ். இந்துக் கல்லூரி.

(33527)



## பிற்போடப்பட்டது

கலைத்தமிழ்க் கழகத்தால் நடத்தப்படும் சமய அறிவுப் போட்டி முடிவு திகதி 12- 11- 94 சனிக்கிழமை வரை பிற்போடப்பட்டுள்ளது. தீபாவளி தினம் நடைபெற இருந்த பரிசளிப்பு விழா 17- 11- 94 ஆம் திகதி பி. ப 3 மணிக்கு யா/ செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

1993 ஆம் ஆண்டு போட்டியில் பரிசு பெற்றவர்கள் எடுத்த படங்களை பெற்றுக் கொள்ளாதவர்கள் எமது நூலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

கலைத்தமிழ்க் கழகம்
சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(33523)


## நரோமா சே[வை] நாளை நடக்கும்

நரோமா கப்பல் சேவை நாளை வியாழக்கிழமை நடைபெறும் என நேற்று அறிவிக்கப்பட்டது.

நேற்று (செவ்வாய்) செல்வதற்குப் பதிவுசெய்த பயணிகளை நாளை காலை 8 மணிக்கு முன் பருத்தித்துறை இறங்குதுறைக்கு சமுகம் தருமாறு யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு அறிவித்துள்ளது. (ஒ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பர்னாந்து இராயப்பு திரேசம்மா

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், தற்போது நாவற்குழி—லவனிதா குடியிருப்பில் வசித்து வந்தவருமான பர்னாந்து இராயப்புவின் மனைவி திரேசம்மா நேற்றுக் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-10-94) புதன்கிழமை மு. ப. 10 மணிக்கு நாவற்குழியில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பர்னாந்து இராயப்பு

லவனிதா குடியிருப்பு,
நாவற்குழி.

(33525)

## ஞானப்பிரகாசம் ஸ்ரனிஸ்லோஸ்

(இளைப்பாறிய பிரதம லிகிதர்
சுகாதாரத் திணைக்களம்)

மிருசுவிலைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் ஸ்ரனிஸ்லோஸ் 24- 10 - 94 அன்று காலமானார்.

அன்னார் மேரி புஸ்பராணி (லூர்ட்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி ஞானப்பிரகாசம் தம்பதிகளின் மகனும், நவராஜா (கனடா), புஸ்பராஜா (கனடா), அருட்திரு ஞானராஜா (புனித அந்தோனியார் ஆலயம், சுன்னாகம்), அனோஜா (ஆசிரியை திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் கொடிகாமம்), உஷாந்தா (Burah Hathy & Co., Colombo), தர்மராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், பெனிற்றா எமா (கனடா), F. X. அன்ரன் (ஆசிரியர் இராமநாதன் மகா வித்தியாலயம் உசன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மேரி றோசம்மா, அருட்சகோதரி சென். போல் (திருக்குடும்ப கன்னியர் மாகாண இல்லம்), காலஞ்சென்ற மரிய இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் மரணச்சடங்கு வழிபாடு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் நாளை (27- 10- 94) வியாழன் காலை 9 மணிக்கு நடைபெறும். அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**S. M. J.** தர்மராஜா
(மகன்)

கண்டி வீதி,
மிருசுவில்.

(33526)

## R. D. மயில்வாகனம் [பொடித்தம்பி]

(Retired Valuation Inspector)

தாமோதரம்பிள்ளை மயில்வாகனம் 25- 10 - 94 அன்று காலமானார். அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், குகதாசன் (வரணி), வசந்தா (அமெரிக்கா), சண்முகதாசன் (அவுஸ்திரேலியா), சாரதா (கொழும்பு), யோகதாசன் (சுவிற்சலாந்து), கிருஷ்ணதாசன்(லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், சத்தியதேவி (ராசு-வரணி), தெய்வேந்திரம் (அமெரிக்கா), சிவரூபி (கொழும்பு), ஜெயக்குமார் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தா. இராசலிங்கம் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்), காலஞ்சென்ற தா. சிவகுருநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற தா. சுப்பிரமணியம் (கூட்டுறவு பரிசோதகர்), காலஞ்சென்ற தா. சேனாதிராசா (விலை மதிப்பீட்டு திணைக்கள உயர் அதிகாரி சம்பியா), க. மரகதப்பிள்ளை, ம. பாலாம்பிகை, ச. மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுதர்ஷன், கலக்ஷன், பிரியதர்சினி, நிரோசன், ரதீஸ், விமலினி, பிரசாந்தன், செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி. ம. நாகேஸ்வரி
[மனைவி]
ம. குகதாசன் [குகன்]
(மகன்)

நவிண்டில்,
கரணவாய் மத்தி.
கரவெட்டி.

[33528]


இன்று முதல்!

**தீபாவளி**

**மலிவு விற்பனை**

✶ கஸியோ (Casio)
✶ சிற்றிசன் (Citizen)

கைக் கடிகாரங்கள்!

மலிவு விற்பனை!!

**01 - 11 - 1994** வரை

★ **அல்டி** ★

269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9448)



வாடிக்கையாளர்களுக்கு

எமது தீபாவளி வாழ்த்துக்கள்

அன்பு அழகுச் சோலையினர்

நகரின் மத்தியில் பரிசுப் பொருள்கள் தேர்ந்தெடுக்க நாடுங்கள்

**அன்பு அழகுச் சோலை**

இதுவரை "சோமன்ஸ்" என்ற பெயரில் 48, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த எமது நிறுவனம் இப்பொழுது "அன்பு அழகுச் சோலை" என்னும் பெயரில் அதே முகவரியில் பணியாற்றுகிறது.

★ எவர்சில்வர் பொருள்கள்
★ மணிக்கூடு வகைகள்
★ சூற்கேஸ், பாடசாலை உபகரணங்கள்
★ குடை, மழைக்கோற்
★ பெற்றோமாக்ஸ், ஹரிக்கன் விளக்குகள்
★ நுளம்பு வலை, நுளம்புத்திரி
★ பால்மா வகைகள்

மலிவு விலை! தரத்துக்கு உத்தரவாதம்!
வருகை தருக!

**அன்பு அழகுச் சோலை**

43, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9446)



**திக்கெட்டும் சிறக்கும் தித்திக்கும் தீபாவளி திருநாளை முன்னிட்டு**

★ **மகோன்னத மலிவு விற்பனை** ★

★ இறக்குமதி செய்யப்பட்ட சகலருக்குமான ஆடை வகைகள்
★ மங்கள வைபவங்களுக்கான பட்டுச் சேலைகள், ★ வேட்டி, ★ காஞ்சிபுர வகைகள் அனைத்தும்

மனநிறைவுடனும், விலைக்குறைவுடனும் பெற்றுக் கொள்ள நாடிடுங்கள்:

**சோபனா ஆடையகம்**
16, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

**மதுரா பட்டு மகால்**
75, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

சிறக்கவிருக்கும் திருநாளில் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் மனநிறைவுடன் வாழ்த்தி நிற்கும்:

**சோபனா ஆடையகம், மதுரா பட்டு மகால்**
உரிமையாளர் & ஊழியர்கள்

[சி/9530]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26—10—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.